பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை 05.12.2025 கதிர் 027

**இது ரகசியம் அல்ல!**

பேரிடரிற்குப் பின்னரான நிலமை தொடர்பில் வடக்கில் இரண்டு விடயங்கள் சமூக ஊடகங்களில் தீவிரமாக அலசி ஆராயப்படுகின்றன. ஒன்று ☞ 2

### பேரிடரிலிருந்து இலங்கை மீட்டெடுக்க

# நிபந்தனையற்ற ஆதரவுக்கு நாம் தயார் ஏற்றுக்கொள்ள ஆளும்தரப்புத் தயாரா?

### ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

நெருக்கடிநிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதனை பெற்றுக்கொள்ள ஆளும்தரப்புத் தயாரா என்பதை அரசுத்தலைவர் தெரிவிக்க வேண்டும். அத்துடன் நாட்டை மீட்கும் வேலைத்திட்டத்தை மேற்கொள்ள அனுபவமுள்ள நிபுணர்கள் குழுவொன்றை அமைக்க அரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிச் செயலாளர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நடவடிக்கை அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு எதிர்கொண்டுள்ள பெரும் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவை ஆளும்தரப்புக்கு வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எமது ஆதரவைப் பெற்றுக்கொள்ள ஆளும்தரப்பு தயாரா என்பதை அரசுத் தலைவர் தெரிவிக்க வேண்டும். ஆளும்தரப்பு தங்களால் முடியும் ☞ 2

### வெள்ளம், மண்சரிவால்

## தொடருந்துப் பாதைகளில் 70 சதவிதமானவை சேதம்

நாட்டின் தொடருந்து சேவைக்கான கட்டமைப்பு மிக மோசமாக சேதமடைந்துள்ளதாகவும், 1,593 கிலோமீற்றர் நீளமுள்ள மொத்த தொடருந்து பாதை அமைப்பில் தற்போது 478 கிலோமீற்றர் மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக, தொடருந்து சேவையை நடத்தக்கூடியதாகக் காணப்படுகிறது. தொடருந்து ☞ 2

### பேரிடர் பாதிப்புக் குறித்து

## தமிழ்க் கட்சிகள் சில இந்தியாவுடன் பேச்சு

'தித்வா' புயல் ஏற்படுத்திய பேரிடருக்குப் பின்னரான நிலமைகள், உதவிகள் தொடர்பில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் பிரதிநிதிகள் இந்தியத் துணைத் தூரகத்தில் அதிகாரிகளைச் சந்தித்துப் ☞ 6

## ஆஸ்திரேலியாவும் 2.5 மில். நிதி உதவி

அண்மையில் இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் ஏற்பட்ட பேரிடர்களினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவுவதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியின் ஊடாக இலங்கைக்கு மேலும் 2.5 மில்லியன் டொலர்கள், நிதியுதவியை வழங்குவதாக ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தரப்பினர் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அதன்படி பேரிடரினால் பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான உடனடி உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கென ஒரு மில்லியன் ஆஸி. டொலர்களை வழங்குவதாக ஏற்கனவே அவுஸ்திரேலியா அறிவித்திருந்தது.

இந்நிலையில் அண்மையில் இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் ஏற்பட்ட பேரிடர்களினால் ☞ 6

### நாணய நிதியத்தின்

# 6ஆவது தவணைக் கடன் இரு வாரங்களில் கிட்டும்

சர்வதேச நாணய நிதியத்தின், நீடிக்கப்பட்ட கடன் வசதியின் ஆறாவது தவணையான சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு வழங்க எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை சர்வதேச அபிவிருத்தி பங்காளர்கள் வலியுறுத்தினர்.

'தித்வா' சூறாவளிக்குப் பின்னர் நிலமையை ☞ 2

## ஆசிய அபிவிருத்தி வங்கியும் 3 மில். டொலர் கடன் தருகிறது

நாடளாவிய ரீதியில் 'தித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான உடனடி மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கென 3 மில்லியன் டொலர்கள் நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதியளித்துள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்படண வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் ☞ 6

## மேலும் 2 மில். டொலர் நிதி அமெரிக்கா வழங்குகின்றது

இலங்கையிலுள்ள மனிதாபிமான உதவி முகவரமைப்புக்கள் ஊடாக வழங்கிய நன்கொடைக்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உயிர்காக்கும் உடனடி உதவியாக 2 மில்லியன் டொலர்கள் நிதியை வழங்குவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பேரிடர்களில் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் ☞ 2

## 50 பில். ரூபா குறைநிரப்பு பிரேரணை முன்வைப்பு

நாட்டில் ஏற்பட்ட திடீர் பேரிடர் ஏற்படுத்திய பாதிப்பிலிருந்து மீள்வதற்கு 50 பில்லியன் ரூபாவை மதிப்பிட்டு குறைநிரப்பு மதிப்பீட்டு பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைவர் அநுரகுமார தலைமையில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூடத்தின்போது ☞ 2

## அத்தியாவசிய உதவிகளை வழங்குவதற்கு சீனா தயார்

'துன்பத்தின்போது உடன் இருப்பவனே உண்மையான நண்பன்' எனும் வாசகத்துக்கு அமைய, இலங்கை மிகமோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையுடன் உடன்நிற்கவும், இதிலிருந்து மீள்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கவும் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யார் வீட்டு வெள்ளத்தை யார் வீட்டுக்குள் விடுவது என்பது தொடர்பானது. நல்லூர் பிரதேசசபையிலிருந்து வெள்ளம் கோப்பாய் பிரதேச சபைக்குள் வெட்டிவிடப்பட்ட வெள்ளத்தைத் தடுத்தமையை முன்வைத்து இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. அடுத்தது வெள்ளத்தால்பாதிக்கப்பட்டவீடுகளைத்துப்புரவு செய்வதற்கென அரசால் வழங்கப்படும் 25 ஆயிரம்ரூபாவைவடக்கில்பாதிக்கப்பட்டவர்கள் பெறலாமா என்பது தொடர்பிலானது.

முதலாவது பிரச்சினை தொடர்பில், நுணலும் தன் வாயால் கெடும் என்பதைப் போன்றுஅமைச்சர்சந்திரசேகரன்தலையிட்டு, அந்தப் பகுதியின் புவியியல் நிலை பற்றிய அடிப்படைப்புரிதலோபுரையோடிப்போயுள்ள சமூக அடுக்குகளின் ஆழமான புரிதலோ எதுவுமின்றி கருத்துக் கூறப்போய் அது இப்போது பெரிய பிரச்சினையாகியுள்ளது. பூவோடு சேர்ந்த நாரும் நறுமணம் வீசும் என்ற சொலவடைக்கு எதிராக மற்றொரு சொலவடை உண்டு. அதற்கு நிகராக இந்த விடயத்தை சமூக ஊடகத்தில் காணொலியோடு பகிர்ந்தவர் பொறுப்புடன் நடந்திருக்க வேண்டிய ஒருவர். கண்டதே காதல் கொண்டதே கோலம் என்பதைப் போன்று வலி. கிழக்கு பிரதேச சபை என்று பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகைக்குக் கீழே தற்காலிகமாக மண்வெட்டியால் வெட்டப்பட்ட ஒரு வாய்க்காலின் குறுக்கே மண் அணைக்கப்பட்டிருந்தைப்பார்த்ததும்அதைக் காணொலியாக்கி ஒரு பிரேதேச சபையின் வெள்ளம் மற்றொரு பிரதேச சபைக்குள் செல்லாமல் தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் கிளப்பிவிட, அதை நம்பி அமைச்சரும் அந்த இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு என்ன ஏது என்று எதுவும் தெரியாமல் கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் மீது குற்றஞ்சாட்டிவிட்டுப் போக பிரச்சினை பற்றிக் கொண்டது.

அங்கேபிரச்சினைபிரதேசசபைகளுக்குள் அல்ல. அந்தப் பகுதியில் மேட்டுப் பக்கமாக இருக்கும்சிலர்தங்கள்வளவுகளில்தேங்கியசிறி யளவிலானநீர்கூடஅங்குநிற்காதுவழிந்தோடி விடவேண்டும் என்று தாங்களாகவே வெட்டிவிட்ட தற்காலிக வாய்க்காலே அது. அவர்கள்வெட்டிவிட்ட வாய்க்கால்என்னவோ பருத்தித்துறை பிரதான வீதியில் மூன்றாம் கட்டையருகே சந்தியில் உள்ள மதகுடன் இணையும்வழியில்தான்இருந்தது. இதனால் இந்தப்பகுதியின்புவியியலும்சமூகஅடுக்கும் குறித்த புரிதல் அற்றவர்களுக்கு அதனைப் பார்த்த உடனே இதில் என்ன தவறு இருக்க முடியும் என்றுதான் தோன்றும்.

ஆனால், நுட்பமான பிரச்சினைகள் அதற்குள் பலவுள்ளன. வாய்க்காலை வெட்டியவர்கள் வசிக்கும் பகுதி அவர்கள் வெள்ள நீரை வடிந்தோட வழிப்படுத்திய பகுதியைவிட மேட்டு நிலம். முன்னர் இந்தப் பகுதிகள் எங்கும் வீட்டு வளவுகள் வேலிகளைக் கொண்டிருந்ததால் மழை நீர் தங்கு தடையின்றி செம்மணி வயல் வெளிகளை நோக்கியும் கோப்பாய் நீர்தேங்கு நிலைகளை நோக்கியும் வழிந்தோட முடிந்தது. போருக்குப் பின்னரான காலத்தில் வளவுகளைச் சுற்றி மதில்கள் முளைக்கத் தொடங்க, வெள்ளநீர் இயல்பாகவழிந்தோடும் வழியை இழந்துவிட்டது. போதாக்குறைக்கு வீதிகளும் உயர்த்தப்பட்டு விட்டதால் வெள்ள நீர் தேங்குவது அதிகமாகிவிட்டது.

இந்த நிலை மேட்டு நிலப் பகுதிகளில் மட்டுமல்ல தாழ் நிலப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய பிரச்சினை. இந்த நிலையில் மேட்டு நில மக்கள் தங்கள் வெள்ளத்தையும் தாழ் நிலங்களுக்குள் வடித்துவிடுவது பிரச்சினைக்குத் தீர்வாக முடியாது. அது தாழ் நிலப் பகுதியின் வெள்ளநீர் மட்டத்தை உயர்த்துமே தவிர வெள்ளத்தை வடிந்தோட வைக்காது. இங்கேதற்காலிகமாகவெட்டப்பட்ட வாய்க்காலை தாழ் நிலப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மறித்ததற்கு அதுவே காரணம்.

வாய்க்காலை வெட்டியது நல்லூர் பிரதேச சபையுமல்ல, அதைத் தடுத்தது கோப்பாய் பிரதேச சபையுமல்ல. அமைச்சர் தலையிட்டுத்தான் இந்தப் பிரச்சினையை அரசியலாக்கிவிட்டார். நல்லூர் பிரதேச சபையில் பிரச்சினைக்குரிய இந்தப் பகுதி வெள்ளத்தால்பாதிக்கப்பட்டபகுதியாகவும்பதிவு செய்யப்படவில்லை. அங்கு வீடுகளுக்குள் வெள்ளம் புகவுமில்லை. சில இடங்களில் வளவுகளுக்கும் மட்டுமே தண்ணீர் தேங்கி நின்றது.

இந்த நிலையில் இது பற்றி போதிய அறிவோ விளக்கமோ இன்றி செயற்பட்ட இருவர் இதனைப் பிரச்சினையாக்கிவிட்டனர். அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதிகள், அவர்கள் வாய்ப்புக்களை அடுத்தவர் மீது பழிபோட்டு அரசியல் ஆதாயம் தேடுவதற்கே பயன்படுத்துவார்கள் என்பது சரி. ஆனால், பத்திரிகையாளர்கள் பேஸ் புக் பதிவர்கள் போன்று கண்டதையும் அப்படியே பதிவிட்டுவிட முடியாது, கூடாது, அது அவர்களின் தொழில் அறமும் அல்ல. எல்லாத் தரப்பு விடயங்களையும் அலசி ஆராய்ந்து அறிக்கையிடுவதே அவர்களை சமூக ஊடகங்களிடம் இருந்து வேறுபடுத்துக் காட்டுகின்றன. அந்தப் பொறுப்புணர்வை அவர்கள் தவறவிடக்கூடாது. பன்றியோடு சேர்ந்த பசு போன்று அவர்கள் மாறக்கூடாது.

அடுத்தது, மேட்டு நிலத்தில் யார் வாழ்கிறார்கள், யாழ்ப்பாணத்தின் தாழ் நிலப்பகுதிகளில் அதிகம் வாழ்பவர்கள் யார் என்கிற சமூகப் புரிதலும் இதுபோன்ற விடயங்களில் மிக அவசியம். தேசிய மக்கள் சக்திதனதுஅரசியலுக்காகவும்வாக்குக்காகவும் இந்தச் சமூக அடுக்கு அரசியலை நுட்பமாகப் பயன்படுத்திவரும் நிலையில் தனது அரசியல் கொள்கைக்கு முற்றிலும் விரோதமாக இந்தப் பிரச்சினையில் ஒரு பக்கச் சார்பாக ஒரு முடிவை எடுத்தது அமைச்சரின் தவறு. இந்தப் பிரச்சினையில் இனியாவது அவர் அங்குள்ள நிலையை ஆராய்ந்து பார்த்து உண்மை விவரத்தைத் தெரிந்துகொள்ளட்டும்.

..................................................

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாகக் கொடுக்கப்படும் 25 ஆயிரம் ரூபாவை யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் பெறுவது நியாயமற்றது என்கிற கருத்துருவாக்கம் ஒன்றும் சமூக ஊடகங்களில்அடுத்த பேசுபொருளாகியுள்ளது. மலையகத்திற்கே அதிக உதவிகள் தேவைப்படும் நிலையில், இங்கே கால் நனைக்கும்வெள்ளத்தால்பாதிக்கப்பட்டவர்கள் அந்த நிதியைப் பெறுவது நீதிக்கே அடுக்காது என்பதைப் போன்று பலரும் கருத்துத் தெரிவிக்க, பாதிக்கப்பட்ட மக்களில் சிலரே அந்தப் பணம் தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லும் நிலையையும் சமூக ஊடகங்களில் காண முடிகிறது.

ஒரு சிலர் தமது வீடு வெள்ளத்தால் பாதிக்கப்படாதபோதும் தமக்கும் கொடுப்பனவுக்குப் பெயரிடப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்திருக்கின்றனர். அப்படிப்பட்ட தவறுகள் திருத்தப்பட்டு, உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே பண உதவி வழங்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதற்காக பாதிக்கப்பட்ட அனைவரும் பணத்தைப் பெறுவது நியாயமே அல்ல என்ற வகையில் கழிவிரக்கத்தை ஏற்படுத்துவது சரியானதல்ல.

ஆளும்தரப்பு அறிவித்துள்ள இந்தக் கொடுப்பனவு, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தவர்கள் தமது வீடுகளைச் சுத்தப்படுத்தி கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதற்கான முதற்கட்டக் கொடுப்பனவு மட்டுமே. அதற்கு மேல் பாதிப்பின் அளவிற்கு ஏற்பவே ஆளும்தரப்பு படிப்படியாக உதவிகளை அறிவிக்கும். அந்தச் சமயத்தில் வடக்கில் உள்ளவர்களுக்கு உதவிகள் வழங்கப்படாமலேயேகூடப் போகலாம். அனைத்து நிதியும் மலையகத்திற்கேகூடத் திருப்பி விடப்படலாம். திருப்பிவிடப்படவும் வேண்டும். அதுதான் நியாயமானது.

இப்போது வழங்கப்படும் கொடுப்பனவு வீடுகளைக்கழுவிச்சுத்தப்படுத்தி, கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதற்கானது மட்டுமே. இந்தக் கொடுப்பனவு மலையகத்தில் மட்டுமன்றி கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது. எனவே அதனை யாழ்ப்பாணத்தில் உள்ள உண்மையில் பாதிக்கப்பட்ட மக்கள் – அது சிறு வெள்ளமாக இருந்தாலும் பெரு வெள்ளமாக இருந்தாலும் பெறுவது நியாயமற்றது என்று சொல்வது தவறு. அவர்களைக்கழிவிரக்கத்திற்குள்தள்ளி பணத்தை திருப்பியனுப்ப வைப்பதெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ..

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com

## நிபந்தனையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றசுயநலத்தைகைவிட்டுஅனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்பட வேண்டும். அதன்மூலமே நாட்டை இந்த நெருக்கடி நிலையில் இருந்து மீட்க முடியும்

நாட்டின் தற்போதைய அசாதாரண நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, சுயநில அரசியல் செய்ய முயற்சிக்க மாட்டோம், அதனால் ஆளும்தரப்பு இதனை வைத்துக்கொண்டுஅரசியல்செய்வதைநிறுத்தி அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்பட வேண்டும். ஆனால் ஆளும்தரப்பு எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்தால், அது மக்கள் மத்தியிலும் பிளவை ஏற்படுத்தும். ஆளும்தரப்பின் வேலைத் திட்டங்களை பார்க்கும்போது, அனுபவம் இல்லாத தன்மையைத் தெளிவாப்புரிந்துகொள்ளலாம்.

இவ்வாறானநெருக்கடிநிலைமைகளுக்கு முகம்கொடுத்த அனுபவமுள்ள பல தலைவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். அவர்களையும் இணைத்துக்கொண்டு 3 மாதங்களுக்குள் நாட்டை மீட்க நாங்கள் முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரும் அழிவுக்கு முகம்கொடுக்க நேரிடும். நாட்டை மீட்பதற்கு ஒரு முறையான வேலைத்திட்டத்தை தொடங்கவேண்டும். அதற்குஅனைவரையும்இணைத்துக்கொண்டு நிபுணர்கள் குழுவொன்றை அமைக்க அரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேநேரம் பேரிடரில் பெருமளவில் மிருகங்கள் உயிரிழந்துள்ளன. 4 இலட்சம் கோழிகள் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவை சந்தைக்கு வந்தால், அது பெரும் அழிவை ஏற்படுத்தும். இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அது தொடர்பாகவும் சுகாதார வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதனால்நாடுஎதிர்கொண்டுள்ளபேரிடரின் பாதூரத் தன்மையை அரசுத் தலைவர் உணர்ந்துகொண்டு, அனைவரையும் இணைத்துக்கொண்டு நாட்டை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கையில் ஆளும்தரப்பு அரசியல் ரீதியில் வீழ்த்த நாங்கள் செயற்பட மாட்டோம். ஆனால் ஆளும்தரப்பு எமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் அரசியல் செய்ய முற்பட்டால், ஆளும்தரப்புஅரசியல்ரீதியில்வீழ்ச்சியடையும் -என்றார்.

## 6ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பிடுவதற்கும் உதவி, மீட்புப் பணிகள் மற்றும் சீரமைப்புச் செயற்பாடுகளுக்கான உதவிகளை ஒருங்கிணைப்பதற்கு இராஜதந்திர தூதுக் குழு, இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களை ஒன்றுசேர்த்து நிதி அமைச்சு புதன்கிழமை மாலை உயர்மட்ட நன்கொடையாளர் கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோரின் தலைமையில்நடைபெற்ற இந்தக்கூட்டத்தில், அரசுத் தலைவரின் மூத்த பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, அரசுத் தலைவரின் மூத்த மேலதிகச் செயலாளர் ரஸல் அபோன்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார ஆகியோர் உட்பட ஆளும்தரப்பின் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதமர் அலுவலகம், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் திறைசேரித் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இடர் நிலமையின்போது அவசரகால நடவடிக்கை முதல், விரிவான, நீண்டகால மீள்கட்டமைப்புத் திட்டத்தை தொடங்கும் ஆளும்தரப்பின் நோக்கத்தை வலியுறுத்தி, சூறாவளியால் நாட்டின் அனைத்துத் துறைகளுக்கும் ஏற்பட்ட பெரும் சேதம் குறித்த கண்ணோட்டத்தை திறைசேரிச் செயலாளர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

குறிப்பாக உணவுப் பொருட்கள், நன்கொடைகள், சலுகை நிதி மற்றும் குறுகிய காலம் முதல் மத்திய கால உதவிகள் ஆகியவைபோன்றவிரைவானமனிதாபிமான ஆதரவு தொடர்பில் அவர் வலியுறுத்தினார். பொருளாதாரத் துறைகளின் சுருக்கம் மற்றும் உள்நாட்டுக் கடன் பெறுவதற்கான கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்படும் தடைகளைக் கருத்தில் கொண்டு, மத்திய வங்கி ஆளுநர் வெளிப்புற நிதி ஆதரவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், நாட்டிற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும்சர்வதேசநாடுகளைஊக்குவிக்குமாறு தூதுவர்கள்மற்றும்உயர்ஸ்ராணையர்களை அரச அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை பிரதிநிதிகள் குழு உறுதிப்படுத்தியது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி ஒருவர் இங்கு குறிப்பிடுகையில், நீடிக்கப்பட்ட கடன் வசதியின் ஆறாவது தவணையான சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள், இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பது மற்றும் நோய் பரவுவதை தடுப்பதற்கான இடர் உதவி நடவடிக்கைகள், அவசர சேவைகள் மற்றும் உணவு, சுத்தமான குடிநீர், சுகாதாரப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் மற்றும் அவசர சுகாதார சேவைகள் போன்ற அத்தியாவசிய மனிதாபிமான பொருட்கள் உள்ளிட்ட உடனடி உதவிகளை வழங்க பல நாடுகள் தற்போது முன்வந்துள்ளன. மேலும் சில நாடுகள் ஏற்கனவே நாட்டிற்கு இடர் நிவாரண மற்றும் மனிதாபிமான குழுக்களை அனுப்பியுள்ளன.

முதன்மை வீதிகள், பாலங்கள், நீர்ப்பாசன கட்டமைப்புகள் மற்றும் போக்குவரத்துக் கட்டமைப்பு உள்ளிட்ட சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை சீரமைப்பதற்கு ஆதரவாக தற்போதுள்ள கடன் வசதிகளை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. நீண்டகால அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதிய கடன்கள் மற்றும் நன்கொடைகள் குறித்த மாற்று வழிகளும் ஆராயப்பட்டன.

உலக வங்கி ஏற்கனவே இடரிற்குப் பின்னரான விரைவான மதிப்பீட்டைத் தொடங்கியுள்ளதுடன், வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள், விவசாயம் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய விரிவான சேதம் மற்றும் தேவைகள் மதிப்பீடு குறித்த கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி மற்றும் மீள் கட்டமைப்பு வேலைத்திட்டத்திற்கு அனைத்து சர்வதேசநட்புநாடுகளிலிருந்துதொடர்ச்சியான ஆதரவு குறித்து இலங்கை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

## மேலும் 2...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்றஅமைப்புக்கள், வணிகநிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தரப்பினர் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையிலுள்ள மனிதாபிமான உதவி முகவரமைப்புக்கள் ஊடாகவழங்கியநன்கொடைக்குமேலதிகமாக, பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உயிர்காக்கும் உடனடி உதவியாக 2 மில்லியன் டொலர் நிதியைவழங்குவதாகஅமெரிக்கஇராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்தோடு வழங்கப்படும் உதவிகள் பேரிடரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் வகையில் தாம் இலங்கை ஆளும்தரப்புடனும், இலங்கையிலுள்ள உதவி முகவரவமைப்புக்களுடனும் மிகநெருக்கமான ஒருங்கிணைப்பை ஏற்படுத்திச் செயற்பட்டுவருவதாகவும் இராஜாங்கத்திணைக்களம்தெரிவித்துள்ளது.

'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட

தொடர்ச்சி 06ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மறுசீரமைப்பின் நீண்டப் பயணம்

'தித்வா' சூறாவளி இலங்கையில் ஏற்படுத்திய அழிவின் பரப்பளவும் ஆழமும் அண்மைக் காலங்களில் எதனாலும் ஒப்பிட முடியாதது. கிராமங்களே முழுமையாக அழிந்து, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீழழந்து, விவசாய நிலங்கள் நீர்மூழ்கி, முக்கிய வழித் தடங்கள், பாதைகள் பலத்த சேதத்தை சந்தித்துள்ளன. நாடு முழுவதும் அவசர மீட்பு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்ற நிலையிலும், இலங்கை இந்தப் பேரழிவிலிருந்து மீள எடுக்கும் காலம் வாரங்களாகவோ மாதங்களாகவோ அல்ல–ஆண்டு அளவிலேயே கணக்கிட வேண்டிய ஒன்றாக மாறியுள்ளது.

மீட்டுருவாக்கப் பணிகள் தொடங்க வேண்டிய முதன்மையான படி, இழப்புகளின் உண்மையான அளவைக் கறைபடாமல் புரிதல்தான். தற்போது நடக்கும் மதிப்பீடுகள் தொடக்கத்திலுள்ளவை மட்டுமே; உண்மையான சேதத்தை முழுமையாகப் புரிந்துகொள்வது இன்னும் எட்டாத பாதை. 2016ஆம் ஆண்டின் பெருவெள்ளத்திற்குப் பின், சேத மதிப்பீடுகள்பலமாதங்களுக்குபிறகேமுடிந்தன. இம்முறைஏற்பட்டிருக்கும் பேரழிவு அதைவிட மிகப்பெரியதாக இருப்பதால், இதற்குத் தேவையான காலமும் அதிகமாகும். தண்ணீர் குறைந்து, சாலைகள் திறக்கப்பட்டு, அதிகாரிகள் முழுமையான தரைப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்பே நமது நாட்டின் உண்மையான காயங்கள் வெளிப்படும்.

தொடக்க ஆய்வுகளே பெரும் அழிவுகளை வெளிப்படுத்துகின்றன. கமத் தொழில் திணைக்களத்தின் கீழ் உள்ள 1,777 குளங்கள், 483 அணைகள், 1,936 கால்வாய்கள், 328 வேளாண்மைச் சாலைகள் சேதமடைந்துள்ளன. உணவுத்தேவைக்கு இன்றியமையாத ஒருலட்சத்து 37 ஆயிரத்து 265 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிந்துள்ளன. 305 சிறிய நீர்ப்பாசன அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. சாலை மேம்பாட்டு ஆணையம் தடைபட்ட 246 சாலைகளை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தாலும், 22 பாலங்கள் முற்றிலும் அழிந்துள்ளன. தொடருந்துப் பாதைகளும் பெரிய சேதத்திலிருந்து தப்பவில்லை. 70 சதவீதமானவை அழிந்துள்ளன.

இதுவொரு இயற்கை பேரிடர் எனும் வரையறையைத் தாண்டும் தாக்கத்தைக் கொண்டது. இது சமூகம், பொருளாதாரம் மற்றும் நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும் சக்தி வாய்ந்த அதிர்ச்சி. மறுசீரமைப்புப் பணிகளுக்குத் தேவையான நிதி இலட்சக்கணக்கான கோடிகளாகவோ அல்லது பல பில்லியன் டாலராகவோ ஆண்டாண்டு கணக்கில் செலவாகக்கூடும். பல கிராமங்கள் பல மாதங்கள் இன்றியமையாத சேவைகளில்லாமல் வாழ வேண்டிய சூழல் உருவாகலாம். சில பிரதேசங்கள் முந்தைய வாழ்க்கை முறைக்கு ஒருபோதும் திரும்ப முடியாத நிலையையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம்.

இருப்பினும், இத்தகைய பேரழிவின் நடுவேயே இலங்கைக்கு ஒரு புதிய வாய்ப்பும் உருவாகியுள்ளது. ஆண்டாண்டுக்கால கவனக்குறைவு, தவறான நகர்ப்புறத் திட்டமிடல், சுற்றுச்சூழலைப் புறக்கணித்த அபிவிருத்தி முறை என்பன இலங்கையை மீண்டும் மீண்டும் பேரிடர்களுக்கு எளிதில் பலியாகும் நெருக்கமான நிலைக்கு தள்ளியுள்ளது. இப்போது இந்தப் பேரழிவு அந்தப் பிழைகளைச் சரி செய்யும் வாய்ப்பை வழங்குகிறது. பாதுகாப்பான, சூழலுக்கேற்ற, நீண்டகாலத்திற்கும் தாங்கும் வகையான புதிய இலங்கையை வடிவமைக்கும் பயணத்தைத் தொடங்க வேண்டிய நேரம் இது.

அதற்காக அரசியல் ரீதியாக கடினமான முடிவுகளும் அவசியம். ஆபத்தான நிலப்பரப்புகளில் மறுபடியும் குடியிருப்புகளை அமைப்பது இனி சகித்துக்கொள்ள முடியாதது. வரலாற்றாக அங்கு மக்கள் வாழ்ந்திருந்தாலும்கூட அறிவியல் அடிப்படையிலான அபாய மதிப்பீடுகள், புவிசார் தகவல்கள், நீண்டகால அபாய வரைபடங்கள் இதனைத் தீர்மானிக்க வேண்டும். சில கிராமங்களை மாற்றம் செய்வது, சில இடங்களில் குடியேற்றத்தைத் தடை செய்வது, அரசியல் ரீதியாக பிரபலமற்ற முடிவுகளாக இருந்தாலும், எதிர்கால பேரழிவுகளைத் தடுப்பதற்குத் தேவையானவை.

அதேபோல், சாலைகள், தொடருந்துப் பாதைகள், அணைகள், கால்வாய்கள்–இவை அனைத்தையும் பழைய நிலைக்குத் திருப்புவது போதாது. சர்வதேச நிபுணத்துவம், நவீன பொறியியல் அறிவு மற்றும் சுற்றுச்சூழல் நட்பான வடிவமைப்பு ஆகியவை வருங்காலத்திற்கு இன்றியமையாதவை. நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள், அணைகள் ஆகியவற்றை பாரம்பரியத்தையும் நவீன பாதுகாப்பு முறைகளையும் இணைத்து மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இதற்கெல்லாம் மேலாக, இலங்கை இனி 'பேரிடர் வந்தவுடன் செயல்படும் நாடு' என்னும் பழைய மனப்பாங்கை விட்டொழிக்க வேண்டும். காலநிலை மாற்றம் காரணமாக கடுமையான வானிலை நிகழ்வுகள் அசாதாரணமானவை அல்ல; அவை எதிர்காலத்தின் அடையாளங்களாக மாறிவிட்டன. எனவே தேசிய அபிவிருத்தித் திட்டங்கள், நிதி நிர்வாகம், நகர்ப்புற திட்டமிடல் ஆகிய அனைத்திலும் 'தாங்கும் திறன்' எனும் அடிப் பாறை நிறுத்தப்படவேண்டும்.

'தித்வா' புயல் இலங்கையின் இருதயத்தில் ஆழமான காயங்களை ஏற்படுத்தியிருக்கலாம். அவை ஆற சில ஆண்டுகளோ சில தசாப்தங்களோ ஆகலாம். ஆனால் இந்தச் சோதனையின் நடுவே நாட்டிற்கு ஒரு மறுபிறவியின் வாய்ப்பும் உள்ளது–சிறந்த திட்டமிடலுடன், அறிவார்ந்த தலைமையுடன், மக்கள் மையப்பட்ட அணுகுமுறையுடன் மீளக்கட்டமைப்பை முன்னெடுத்து, முந்தைய பிழைகள் மீண்டும் நடக்காத வகையில் புதிய இலங்கை ஒன்றை வடிவமைக்கக்கூடிய தருணம் இது.

## புதிய எம்.பியானார் தாஹீர்

முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நெய்யா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹீர் பெயரிடப்பட்டுள்ளார்.

ரிஷாத்பதியுதீன்தலைமையிலானஅகிலஇலங்கை மக்கள் காங்கிரஸைசேர்ந்தவரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது அண்மையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

இந்நிலையிலேயே முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மதுவின் வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை சேர்ந்த அக்கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரான நெய்யா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## ஜப்பானிய இடர் உதவிக் குழு இலங்கையை வந்து சேர்ந்தது

பேரிடரினால் பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான மருத்துவ உதவிகளை வழங்க்குவதற்கென ஜப்பான் ஆளும்தரப்பின் உத்தரவுக்கு அமைய ஜப்பான் இடர் உதவி, மருத்துவ உதவிக்குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் ஒருங்கிணைப்பின்கீழ் புதன்கிழமை (3) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்த இக்குழுவினரை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் வரவேற்றார்.

விசேட மருந்துவ நிபுணர்கள் உள்ளிட்ட 31 பேரடங்கிய இக்குழு, இடரினால் பாதிக்கப்பட்டோருக்கான சுகாதார மருத்துவ உதவிகளை வழங்கவுள்ளது.

அதன்படி கடந்த முதலாம் திகதி நாட்டை வந்தடைந்த குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைய சிலாபத்தில் மருத்துவ கிளினிக் வசதியொன்று உருவாக்கப்படவுள்ளது.

## மற்றொரு இந்திய விமானமும் உதவிப் பொருள்களுடன் வருகை

பேரிடரினால்பாதிக்கப்பட்டநாட்டுமக்களின்உதவிப் பணிகளுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் வகையில், இந்தியாவின் மனிதாபிமான உதவிகளுடனான சி-17 விமானம் புதன்கிழமை பிற்பகல் இலங்கையை வந்தடைந்தது,

இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவினால் இந்த உதவிப் பொருட்கள் உத்தியோகபூர்வமாக இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் (அவசர நடவடிக்கை) ஓய்வு பெற்ற பிறகு தற்போது தன்னார்வலராகப் பணியாற்றி வரும் சுனில் ஜயவீர, பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் (அவசர நடவடிக்கை) இந்திக புஷ்பகுமார மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் டயனா பெரேரா ஆகியோர் அவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீதிக் கட்டமைப்பை சீரமைப்பதற்காக 50 டொன் இரும்புப் பாலங்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீரை உறுதி செய்வதற்காக ஒரு இயந்திரத்திற்கு 20 லிற்றர் தண்ணீரை சுத்திகரிக்கும் திறன் கொண்ட 500 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் ஆகியவை இதில் அடங்குகின்றன.

## உதவிப் பொருள்கள், ஆளணியுடன் பாக். விமானமும் வந்து சேர்ந்தது

அவசர உதவிப் பொருட்கள் மற்றும் விசேட மீட்புக் குழுவுடனான பாகிஸ்தான் விமானப்படையின் சி-130 விமானம் புதன்கிழமை நாட்டை வந்தடைந்தது.

கொழும்பிலுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் உயராணையர், இந்த உதவிப் பொருட்களை உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு ஒப்படைத்ததுடன், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடிதுவக்கு உள்ளிட்ட குழுவினர் அதில் கலந்துகொண்டனர்.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களின் உதவிப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பாகிஸ்தான் பிரதமர் முகமது ஷெபாஸ் ஷெரீபின் பணிப்புரையின் பேரில் பாகிஸ்தான் இராணுவத்தின் தேடல் மற்றும் மீட்புப் பிரிவைச் சேர்ந்த 47 உறுப்பினர்களும், 6.5 மெட்ரிக் டொன் அத்தியாவசிய உபகரணங்களும் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கூடாரங்கள், போர்வைகள், லைஃப் ஜெக்கெட்டுகள், படகுகள், நீர் பம்புகள், விளக்குகள், பாய்கள், நுளம்பு வலைகள், குழந்தைகளுக்கான பால்மா, பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் ஆகியவை இந்த நிவாரணப் பொருட்களில் அடங்குகின்றன.

பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள் மற்றும் ஹெலிகப்டர்கள் ஏற்கனவே இலங்கையில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இடையேயான பேச்சுக்களைத் தொடர்ந்து அனுப்பப்பட்டது. பாகிஸ்தான் ஆளும்தரப்பு இலங்கைக்கு தனது மனிதாபிமான உதவிகளை விரிவுபடுத்தியுள்ளது.

மனிதாபிமான உதவி மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான அதன் நீண்டகால அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, இலங்கைக்கு இயன்ற அனைத்து ஆதரவையும் தொடர்ந்து வழங்கும் என்று பாகிஸ்தான் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

## பிரதேச சபை உறுப்பினர் சுகவீனத்தால் உயிரிழப்பு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் அகி என அழைக்கப்படும் துஷ்யந்தன் இன்றைய தினம் வியாழக்கிழமை சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

அவரது இறுதி கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சீன கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவினர் ஜேவிபி தலையகத்திற்கு வருகை

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் பிரதிநிதிகள் குழு மேற்கொண்டுள்ள அவதானிப்பு சுற்றுப் பயணத்தின் நிமித்தம் பெலவத்த ஜேபிவியின் தலைமை அலுவலகத்திற்கு புதன்கிழமை வருகை தந்தனர்.

இந்த பிரதிநிதிகள் குழுவில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசப் பிரிவின் தகவல் மத்தியநிலைய பிரதி பணிப்பாளர் நாயகம் கேங் ஷுவாய், பீஜிங் நகராட்சி குழு கட்சிப் பாடசாலையின் உதவிப் பேராசிரியர் ஜியாங் வென் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தகவல் மத்தியநிலையத்தின் பணிப்பாளர் ஷெங் குபிங் ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்தப் பிரதிநிதிகள் முதலில் மஹரகமவில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு விஜயம் செய்து, தற்போது முகம்கொடுத்து வருகின்ற இயற்கை அனர்த்த நிலைமை குறித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தேவானந்த சுரவீர, லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோரும்மஹரகமமாநகரசபையின் முதல்வர் சமன் சமரகோன், துணை முதல்வர் ரஞ்சன் நாம்படுன்ன மற்றும் ஹோமாகம பிரதேச சபை தலைவர் கசுன் ரத்நாயக்க உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அதையடுத்து, ஜேவிபியின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்த சீனக் குழுவினர் தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவுடன் கலந்துரையாடினர்.

தற்போது இலங்கை முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்ற அவசர பேரிடர் நிலைமை குறித்தும் அதிலிருந்து மீள்வதற்கும் வெற்றிகொள்வதற்கும் சீனா வழங்குகின்ற ஒத்துழைப்பு குறித்தும் தரவுகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கடினமாக சூழ்நிலையில் இருந்து மீள்வதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆளும்தரப்பின் மூலம் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஒத்துழைப்புக்கு இதன்போது பிரதி அமைச்சர் நன்றிகளை தெரிவித்தார்.

சீனாவும் இதுபோன்ற பல இயற்கைப் பேரிடர்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும், அந்த நிலைமைகளை தங்களால் நிர்வகித்துக் கொள்ள முடிந்ததாகவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் தகவல் மத்திய நிலையத்தின் பிரதிபணிப்பாளர்நாயகம்தெரிவித்தார்.

குறிப்பாக, நிகழ்காலசீனாவைகட்டியெழுப்பும்போதுசீனஆளும்தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் விவரித்த சீன பிரதிநிதிகள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பதினைந்தாவது ஐந்தாண்டு திட்டத்தை தற்போது சீனா நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜேவிபிக்கும் இடையில் ஒத்துழைப்பை மேலும் விருத்தி செய்வதற்காக இலங்கையின் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளால் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான அலுவலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

## வழமைக்குத் திரும்புகிறது மின்சார விநியோகம்

நாட்டில் நிலவிய இயற்கைப் பேரிடர்களினால் 39 இலட்சம் மின்பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களில் 86 சதவீதமானோருக்கு தற்போது மின்விநியோகம் மீளிணைக்கப்பட்டுள்ளது. மிகுதியானவர்களுக்கு வெகுவிஷ்வில் மின்விநியோகம்வழங்கப்படுமெனஇலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் நொயெல் பிரியந்த தெரிவித்தார்.

மின்விநியோகக் கட்டமைப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த வாரம் நிலவிய வெள்ளம், கடும்புயல்மற்றும்நிலச்சரிவு ஆகிய இயற்கை பேரிடர்களினால் மின்விநியோக கட்டமைப்பு மிகமோசமாக பாதிக்கப்பட்டது. இந்த பாதிப்பால் இலங்கை மின்சார சபையின் சொத்து இழப்பு 40 முதல் 45 சதவீதமளவில் பதிவாகியுள்ளது.

நாட்டில் மொத்தமாக 73 இலட்சம் மின்பாவனையாளர்கள் உள்ளார்கள்.

இவர்களில் 39 இலட்சம் மின்பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களில் 86 சதவீதமானோருக்கு தற்போது மின்விநியோகம் மீளிணைக்கப்பட்டுள்ளது. மிகுதியானவர்களுக்கு வெகுவிஷ்வில் மின்விநியோகம் வழங்கப்படும்.

நாடளாவிய ரீதியில் 16771 மின்பிறப்பாக்கிகள் சேதமடைந்த நிலையில் அவற்றில்14549மின்பிறப்பாக்கிகள்பழுதுபார்க் கப்பட்டு, மீண்டும் மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.


இந்த நெருக்கடியான சூழ்நிலையில் மின் இணைப்புபணிகளில்ஈடுபட்டுதுரதிஸ்டவசமாக ஹெட்டிபொல பகுதியில் உயிரிழந்த மின்சார சபையின் சேவையாளரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

# 'தித்வா' புயலால் இதுவரை 18 லட்சம் பேருக்கு பாதிப்பு

'தித்வா' புயலால் நாடளாவிய ரீதியில் இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட்டு இன்றுடன் ஒருவாரம் நிறைவடைந்துள்ளது. கடந்த ஒரு வாரமாக பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், காணாமல்போனோரை தேடும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நேற்றைய தினம் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 18 இலட்சத்தைக் கடந்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று மாலை வரையிலான தரவுகளின் பிரகாரம் 5 லட்சத்து 9 ஆயிரத்து 680 குடும்பங்களைச் சேர்ந்த 18 லட்சத்து 14 ஆயிரத்து 534 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 481 பேர் உயிரிழந்துள்ளனர். காணாமல் போயுள்ள 345 பேரை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





அது மாத்திரமின்றி ஆயிரத்து 967 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, 50 ஆயிரத்து 173 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பேரிடர் நிலைமை காரணமாக 48 ஆயிரத்து 559 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 71 ஆயிரத்து 492 பேர் ஆயிரத்து 236 பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வு கூறலின்படி நேற்றைய தினம் நாட்டின் பல பகுதிகளிலும் மாலை வேளையில் கன மழை பெய்தது. அதேபோன்று இன்றைய தினமும் வடக்கு, வட-மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் பலத்த மழை பெய்யும் எனவளிமண்டலவியல்திணைக்களம்தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 1 மணிக்குப் பின் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும்சிலஇடங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வட-மத்திய மாகாணங்களிலும், குருநாகல் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களிலும் அதிகாலை நேரங்களில் சில இடங்களில் மூடுபனி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்படுவதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 6 முதல் 9 வரை கன மழையுடனான காலநிலைஎதிர்பார்க்கப்படுகிறது. இது பெரும்பாலும் தென் மாகாணத்தைப் பாதிக்கும். அத்தோடு இந்த மழைக் காலநிலையானது மத்திய மாகாணத்தில் குறிப்பாக குறிப்பாக மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களைப் பாதிக்கும். அந்த அடிப்படையிலேயே மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

## மேலும் 2...

பாதிப்புக்களில் இருந்து நாட்டை மீட்டெடுத்து, மீளக்கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் இலங்கை ஆளும்தரப்பு ஈடுபட்டுவரும் நிலையில், அதனுடன் கூட்டிணைந்து அவசிமான உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்க

## அத்தியாவசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரிடரில் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன்,இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்றஅமைப்புக்கள், வணிகநிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தரப்பினர் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அந்தவகையில்இலங்கைமக்களுக்கான உதவி முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யும்வகையில் சீன ஆளும்தரப்பினால் ஒரு மில்லியன் டொலர் நிதியுதவியும், 10 மில்லியன் ஆர்.எம்.பி. பெறுமதியான நிவாரணப்பொருட்களும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை சீன செஞ்சிலுவை சங்கத்தினால் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு 100,000 டொலர் உடனடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கையிலுள்ள வெளிநாட்டு சீன சங்கத்துடன் இணைந்து சீன வர்த்தக சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்ட நன்கொடை சேகரிப்பு முயற்சியின் ஊடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடியவகையில் 10 மில்லியன் ரூபா நிதி திரட்டப்பட்டுள்ளது.

இவ்வனைத்து உதவிகளும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷி சென்ஹொங்கினால் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் 'துன்பத்தின்போது உடன் இருப்பவனே உண்மையான நண்பன்' எனும் வாசகத்துக்கு அமைய, இலங்கை மிகமோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில்இலங்கையுடன்உடன்நிற்கவும், இதிலிருந்து மீள்வதற்கு அவசியமான உதவிகளைவழங்கவும்தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

## 50 பில். ரூபா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இந்த 50 பில்லியனில் 20 பில்லியன் ரூபா அபிவிருத்திஉதவிகளுக்காகவும்,30 பில்லியன் ரூபாஉதவிகளுக்காகவும்ஒதுக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார். 'தித்வா' புயலால் ஏற்பட்ட பேரிடரால் நாடளாவிய ரீதியில் 16 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 470க்கும் மேற்பட்டோர் உயிரிந்துள்ளனர். அது மாத்திரமின்றி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும், 44 000க்கும்அதிகமானவீடுகள்பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

தற்போது காலநிலை வழமைக்கு திரும்பியுள்ளநிலையில்,ஏற்பட்டுள்ளஅழிவுகள் குறித்த மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முழுமையான சேதமடைந்த வீடுகளுக்கு தலா 25 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்றும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு சேதத்துக்கு ஏற்ப நிதிஉதவிவழங்கப்படும்என்றும்ஆளும்தரப்பு முன்னர் அறிவித்திருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் விசேட அமைச்சரவை கூட்டம் இடம்பெற்றது. இதன் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்றத்தில் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் மீதான விவாதம் இடம்பெற்று வருகிறது. இந்நிலையில் இந்த வரவு - செலவு திட்டத்தின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நிவாரணத்தையோஅல்லதுஉதவிகளையோ வழங்க முடியாது என குற்றஞ்சாட்டியுள்ள பிரதான எதிர்க்கட்சி, ஜனவரியில் புதிய வரவு - செலவு திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை புதன்கிழமை முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், சகல எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போது ஆளும்தரப்பிடம்முன்வைக்கப்படவேண்டிய சிலமுக்கிய விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த வகையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்றாமல், குறை நிரப்பு பிரேரணையொன்றை முன்வைக்க வேண்டும். இடர்களால் ஏற்பட்டுள்ள முழுமையான சேதங்கள் மற்றும் அவற்றை மறுசீரமைப்பதற்கான செலவுகளை மதிப்பிட்டதன்பின்னர்ஜனவரியில்புதியவரவு - செலவு திட்டமொன்றை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இதன் போது வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கி பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன்,இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்றஅமைப்புக்கள், வணிகநிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மிகமோசமானஇயற்கைஅனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளினால் உத்தியோகபூர்வ உதவிக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், அதற்கமைய இலங்கைக்கு 3 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும்ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஸாட்டோ கன்டா தெரிவித்துள்ளார்.

'மிகமோசமான வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டிருக்கும் பெரும் சேதங்கள் குறித்து மிகுந்த கவலையடைகின்றேன். பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும், நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் உறுதியளிக்கிறேன்' எனவும் மஸாட்டோ கன்டா குறிப்பிட்டுள்ளார்.

மிகமோசமான பேரிடர்களின் பின்னர் உயிர்காக்கும் உடனடி உதவிகளை வழங்குதற்கெனஒதுக்கீடுசெய்யப்பட்டிருக்கும ஆசியபசுபிக்இடர்உதவிநிதியத்தின்ஊடாகவே மேற்படி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## ஆஸ்திரேலியாவும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவுவதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியின் ஊடாக இலங்கைக்கு மேலும் 2.5 மில்லியன் டொலர்கள் வழங்குவதாக அவுஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று அண்மையில் ஏற்பட்ட சூறாவளி, வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம் மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்லாந்துமற்றும்வியட்நாம்ஆகியநாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், தமது நிதியுதவியின் ஊடாக அவர்களுக்கு அவசியமான உணவு, குடிநீர், தங்குமிடம், மருந்துகள், சுகாதாரப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொடுக்கமுடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளஆஸ்திரேலியஅயலுறவுத்துறை அமைச்சர் பெனி வொங், அண்மையில் ஏற்பட்டமிகமோசமானவெள்ளப்பெருக்கினால் தெற்கிழக்காசியாவிலும், இலங்கையிலும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் நினைவுகூருகின்றோம்.

பாதிக்கப்பட்டதரப்பினருக்கு அவசியமான உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதை முன்னிறுத்தி எமது பிராந்தியத்திலுள்ள ஏனைய பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டுவருகிறோம் எனத்தெரிவித்தார்.

## தமிழ்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்தியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், அதற்கு எவ்வாறான உதவகளை வழங்குவது என்பது பற்றியும், முல்லைத்தீவு, மன்னாரில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இழப்புக்களுக்கு உடனடியாக என்ன செய்வது என்பது தொடர்பாகவும், இரண்டாவது கட்டமாக என்ன செய்வது என்பது தொடர்பாகவும் பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன என்று சந்திப்பின் பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்அரசுக்கட்சித்தலைவர்சிவஞானம், ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். சந்திப்புக் குறித்து சுரேஸ் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணமக்களின்தேவைகளை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதத்தையும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளிடம் கையளித்ததுடன் அதன் பிரகாரம் வடக்கு, கிழக்குமாகாணங்களைஎதிர்காலத்தில்பெரும் பாதிப்புகளில் இருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாகவும், இப்போதுள்ள நிலமையைச் சீர்செய்வது தொடர்பாகவும் பேசியிருந்தோம்.

இந்தப் பேரிடர் ஏற்பட்ட பின்னர் இந்திய அரசால்கொழும்புஊடாகவும்திருகோணமலை ஊடாகவும்பாதிக்கப்பட்டமக்களுக்குஉதவிகள் கொண்டுவரப்பட்டமைக்குத் தமிழ் மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்தோம். விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. அடுத்த மாதங்களில் நிச்சயமாகப் பொருளாதார பின்னடைவைச் சந்திக்கவிருக்கின்றோம்.

வடக்கில்வெள்ளத்தால்ஆயிரக்கணக்கான கால்நடைகள்இறந்திருக்கின்றன. அதனுடைய முழுமையானவிவரங்கள்இதுவரைதெரியாது. அந்தவிவசாயிகள், பண்ணையாளர்களுக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனை மீள உருவாக்குவதற்கானவேலைத்திட்டங்களைச் செய்யவேண்டும். வன்னி மக்கள் இத்தனை வருடத்தில் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தவர்கள்.

இந்த நிலையில் அவர்கள் மீண்டும் மீண்டும் இடப்பெயர்வுக்கு உள்ளாகுவது என்பது ஒரு பெரிய ஒரு சுமை. அவர்களுக்கு உதவுவதற்கு இந்தியா செயற்படவேண்டும். அதற்கு இந்தியா முன்வந்திருக்கின்றது. தமிழ் நாட்டு முதல்வர் ஸ்டாலின் தாங்களும் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறார் என்று கூறி இருக்கிறார் அதற்கும் நன்றி சொன்னதுடன் மேற்கொண்டு செய்ய வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் பேசியிருக்கின்றோம் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# அரசியல் மட்டுமா செய்தார்கள்?

## என்.சத்தியமூர்த்தி

தற்போதைய பேரிடரில் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு, அண்டை நாடான இந்திய வழமை போலவே, உதவிப் பொருள்களை அளித்த வண்ணம் இருக்கிறது. இனனும் சொல்லப்போனால், பேரிடரைத் தொடர்ந்து இலங்கை அரசின் கோரிக்கை என்று எதற்கும் காத்திராமல், இந்திய அரசு தனது பேரிடர் மீட்பு பணிக் குழுக்களையும், அவசரகால உதவி பொருள்களையும் தயார் நிலையில் வைத்திருந்தது. எனவே. அதிபர் அநுரகுமார கோரிக்கை முன் வைத்தவுடனே, சில மணிதியாலங்களில் அந்த உதவி பொருள்களும் பேரிடர் மீட்புப் பணியினரும் வந்து சேர முடிந்தது.

இது இப்படியென்றால், இந்தியாவின் இரண்டு ஆயுதம் தாங்கிய கப்பல்களில் ஒன்றான ஐ என் எஸ் விக்ராந்த், எதேச்சையாக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இட்டிருந்தது. இலங்கைக் கடற்படையினால் ஏற்பாடு செய்யபட்ட கடல் ஆய்வு அணிவகுப்பில் பங்கெடுக்கவே, இந்திய கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருந்தது.

இலங்கை உதவி என்று கேட்டவுடனேயே. இந்திய அரசின் உத்திரவுபடி, விக்ராந்த் கப்பலில் அதன் வீரர்களின் அன்றாடப் பயன்பாட்டிற்காக வைத்திருந்த உணவு பொருள்கள் மற்றும் அவசரகால உதவிக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை உடனடியாகவே வழங்கினார்கள். அது போன்றே. விக்ராந்த் கப்பலின் ஹெலிகாப்படர்கள், இலங்கை பாதுகாப்பு படையினருடன் மீட்பு பணிகளில் பங்கெடுத்தன.

தென்னிலங்கைக்கு இந்திய உதவி இவ்வாறு வந்ததென்றால், வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்குத் தனியான உதவி, இந்திய கடற்படையின் ஐ என் எஸ் சிந்து என்ற கப்பல் மூலம் திரிகோணமலையை வந்தடைந்தது. மேலும், எவ்வளவு உதவிப் பொருள்கள் வேண்டி இருந்தாலும் இந்தியா அவற்றை அனுப்பி வைக்கும் என்றும் புது டெல்லி அறிவித்துள்ளது.

### எதேச்சையாக இல்லை

இடையில் அதிபர் அநுரவுடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, எல்லாவித சூழ்நிலைகளிலும் இலங்கைக்குத் துணையாக இந்தியா நிற்கும் என்று கூறினார். இதில், கொடுமை என்னவென்றால், சில புலம்பெயர்ந்த தமிழர்களோ இந்தியாவை எதிர்த்து கதை கட்டி விடுவதற்கு தற்போதைய பேரிடரையும் விட்டு வைக்கவில்லை. அடிப்படைப் புரிதல் இன்மையாலும், எப்போதோ குருதியில் கலந்த இந்தியா-எதிர்ப்பு மனப்பான்மையாலும், சின்னப்புத்திக்காரர்களாகவே,; இந்திய உதவி குறித்து சமூகவலை தளங்களில் தகவல் பரப்பி வருகிறார்கள்.

அவர்களது கூற்றின்படி, இந்தியாவின் விமானம் தாங்கி கப்பல் விக்ராந்த் கொழும்பு துறைமுகத்தில் நின்றது, எதேச்சையாக இல்லை. மாறாக, அது இந்தியாவின் 'ஆப்ரேஷன் பூமாலை-2' இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே கருதப்படவேண்டும். 1987ஆம் ஆண்டு, இலங்கை இனப்போரில், வடமராச்சியில் முடக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்காக வான்வெளி மூலம் இந்திய இராணுவம் முன்னெடுத்த நிவாரண உதவியே 'ஆப்ரேஷன் பூமாலை' என்று அறியப்படுவது குறிப்பிடதக்கது.

### மொட்டை தலைக்கும்...

தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள சூழலே வேறு. ஆனால், மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுகிறார்கள் இந்த அறிவீலிகள். இதனால், வடக்கு-கிழக்கில் வாழும் அப்பாவித் தமிழர்களைக்கூட ஏமாற்ற முடியாது. ஆனால், நாட்டிலேயே வடக்கு-கிழக்கு தமிழர்கள்தான் பேரறிவாளர்கள் என்பதும் உண்மை. அந்த எண்ணமே தற்போதும் அவர்களை ஆட்டிப் பிடிப்பதும் உண்மை.


இது இப்படி என்றால், பத்திரிகை செய்திகளின்படி, மேலும் பல புலம்பெயர்ந்த பிரகஸ்பதிகள் இது போன்ற எண்ணவோட்டத்தில் தாங்களாகவே கடந்த சில தசாபதங்களாக மாட்டிக்கொண்டு அதில் இருந்து வெளியே வரமுடியாமல் தவிக்கிறார்கள். அந்தக் கதைகளில் ஒன்று, இந்தியப் பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதன் காரணமே, அந்த நாட்டில் ஏதாவது ஒரு பகுதியில் ஏதாவது ஒரு இயற்கைப் பேரிடர் மாறி-மாறி தாக்கும் என்பதால்தான் இந்தியா தயார் நிலையில் இருக்கின்றது என்பதே அந்தக் கதை..

இது முற்றிலும் உண்மை. அதற்காகவே இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பல்வேறு நகரங்களிலும் பேரிடர் ஆணை குழுவின் செயல் அலுவலகங்கள் நாள் முழுமைக்கும் தயார் நிலையில் இருக்கின்றன. அவர்களோடு இணைந்து, இந்திய கடற்படையும் விமான படையும்கூடச் செயலாற்றுகின்றன.

தற்போது தித்வா பேரிடர் இலங்கையில் கோரத் தாண்டவம் ஆடி விட்டு, இந்தியா நோககி பயணிப்பதை எதிர்நோக்கி, இந்த பேரிடர் ஆணை குழுவின் வீரர்கள் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தயார் நிலையில் இருந்தார்கள். இந்தச் செய்தி எவ்வளவு உண்மையோ, அவ்வளவு தவறான ஒரு விடயமும் அத்துடன் இடைசெருகலாக சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, இலங்கையை இந்தியாவின் மற்றொரு மாநிலமாக இந்தியா கருதி செயல்படுவதினால் மட்டும்தான், அது இலங்கைக்கு அதி தீவிரமாக இது போன்ற உதவிகளைச் செய்து வருகிறது என்பதே அந்தத் தவறான விடயம்.



அதாவது, இந்தியா, இப்போதோ அல்லது எப்போதாகிலும் இலங்கையை தனது ஒரு மாநிலமாககையகப்படுத்தும் என்பதே இவ்வாறான உளறல்களின் உள் கருத்து. இது போன்று, தங்களுக்கு தாமே, இந்தியாவின் இலங்கையுடனான உறவுநிலை குறித்து சில அதிமேதாவிகள் இருபத்து நான்கு மணி நேரமும் சிந்தித்து செயல்பட்டமையால் தான், அவர்களுக்கு கள நிலவரத்தை சரியாக புரிந்து கொள்ளவே முடியவில்லை.



### வேத வாக்கு

இது போன்ற கருத்துக்களை வைத்து நோக்கும்போது, இது போன்றோர், இனப் போர் தொடங்கும் காலத்தைய தலைமுறையினர். அல்லது அவர்களிடமிருந்து இத்தகைய கருத்துக்களை கற்றறிந்து, அவற்றையே வேத வாக்காக நம்புபவர்கள். இவர்களில் மூத்த தலைமுறையினர், இந்திய அமைதிப்படைக் காலத்திற்கும் முன்னர், குறிப்பாக 'ஆப்ரேஷன் பூமாலை' காலத்தவர்கள். அவர்களால்தான் இவ்வளவு 'வளமாக' சிந்திக்க முடிந்தது.

இத்தகைய சிந்தனையின் அடிப்படையிலுமே இனப் போர் இந்த அளவிற்கு தமிழர் தரப்பால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், இவ்வாறான எண்ணவோட்டத்தில் உள்ள தமிழர்கள், அன்றும் இன்றும் மறந்து போன விடயம் ஒன்று உள்ளது. அவர்களைப் பொறுத்தவரையில், முன்னர் 1971ஆம் ஆண்டு வங்க தேசம் உருவாக இந்தியாவே காரணியாக இருந்தது. அது போன்றே, இங்கும் தமிழர்களுக்காக ஒரு தனி நாடு அமைத்துத் தர இந்தியா போராடும் என்று அவர்களாகவே கருதிச் செயல்பட்டார்கள்.

அவர்களிடம் கேட்டால், இந்தியாவின் 'ரோ' உளவு துறை அவ்வாறு தான் தங்களுக்கு நம்பிக்கை மற்றும் உத்திரவாதம் அளித்தார்கள் என்பார்கள். ஆனால், அன்று 'ரோ' அமைப்பில் முக்கிய பொறுப்புகளில் இருந்த எவருமே இவ்வாறான கருத்துகளுக்கு ஆதரவு கொடுத்து, உத்திரவாதம் அளித்ததாக ஆதாரம் இல்லை. அதுவே உண்மையும்கூட. இதில சில தமிழர்கள், தங்களது அதீத ஆசையாலும் அதிகப் பிரசங்கித்தனத்தாலும், இல்லாத ஒன்றை இருப்பதாக உருவகபடுத்தி, அது நடவாமைக்கு இந்தியாவை இன்னமும் குறை சொல்லி வருகிறார்கள்.





மாறாக, அவர்கள் சிந்திருக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான். எவ்வாறு வங்க தேசம் உருவாவதற்கு இந்தியா பாகிஸ்தானுடன் போரிட்டதோ, அந்த போர் முடிந்த முதல் வாய்ப்பிலேயே, இந்தியப் படைகள் தங்களது நாடு திரும்பின. பின்னர் மாலதீவில் 1998 ஆயுத கிளர்ச்சி, 2005இல் இலங்கை மற்றும் மாலத்தீவில் சுனாமி அனர்த்த காலத்தில் மீட்பு பணி முடிந்ததும், இந்திய படைகள் தங்கள் நாட்டிற்குத் திரும்பின. இதுதானே இந்திய அமைதி படையின் காலத்திலும் நடந்தது?

ஆனால், சில தமிழ் தரப்பினர், உண்மையை உண்மை என்று நம்பவே மாட்டேன் என்று சத்தியம் செய்திருக்கிறார்கள். இந்த குறிப்பிட்ட பின்னணியில் இந்திய அமைதி படை குறித்துக் குறிப்பிட்டால், உடனேயே அவர்கள். விடயத்தை வேறு எங்கோ பயணித்து, குறி;பிட்ட பிரச்சினையில் இருந்து பதில் சொல்லாமல் ஓடி விடுவார்கள்.

### கண்ணை கட்டி

ஆனால், அப்போதும் சரி, இப்போதும் சரி, இந்திய அரசின் கொள்கைதான் என்ன? வங்க தேச போர் ஆகட்டும், இலங்கையில் 1983 'கறுப்பு வெள்ளி' தமிழர் படுகொலைகள் ஆகட்டும், இந்திய அரசு அவற்றை ஒரு மனிதாபிமான விடயமாகவே நோக்கிச் செயல்பட்டது. ஐ.நா. 2009ஆம் ஆண்டு 'ஆர்.டு.பி' என்ற 'பாதுகாப்பிற்கான பொறுப்பு' தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, திபெத். தற்போது மியான்மார் என்று அறியப்படும் பர்மா, இலங்கையின் மலையக தமிழர்கள், பின்னர் வங்க தேசம் மற்றும் இலங்கைத் தமிழர்கள் என்று இந்தியாவில் தஞ்சம் புகுந்த மக்களுக்கு அந்த நாடு அரவணைப்பும், பாதுகாப்பையும் வழங்கியது.

அதாவது, ஐ.நா. உள்ளுணர்த்திய இராணுவப் பாதுகாப்பிற்கு அப்பால் சென்று, மனிதாபிமான



பாதுகாப்பை இந்தியா உறுதி செய்தது. இது அரசுகளும் ஆய்வாளர்களும் கருதிவரும் இராணுவ ரீதியான பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டது. உதாரணம் சொல்ல வேண்டுமானால், இலங்கைத் தமிழர்களின் உரிமை, பாதுகாப்பு என்றெல்லாம் வாய் கிழியும் ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள், வழங்காத அகதிகளுக்கான உதவிகயை இந்தியா மட்டுமே வழங்கி வருகிறது.

இன்னும் ஒரு படி மேலே சென்றால், இந்தியாவில், தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் வாழும் இலங்கையில் இருந்து சென்ற தமிழ் பேசும் மக்கள், தங்கள் நாட்டிற்கு போக விருப்பம் தெரிவித்தால்கூட, அவர்களுக்கு அங்கு பாதுகாப்பும், உரிமைகளும் வாழ்வாதாரங்களும் உறுதிப்படுத்தப்படாமல், அவர்களை கண்ணை கட்டி காட்டில் விடுவதற்கு தயாரில்லை என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

இது தவிரவும், வங்க தேசம் மற்றும் இலங்கை தமிழர் பிரச்சினை ஆகிய இரு காலகட்டத்திலும், இந்தியா, இராணுவ ரீதியாகவும் இடைபட்டது. வங்க தேச விடயத்தில், அவர்கள் இந்தியாவின் முதுகில் குத்துவதற்கு ஐந்து தசாப்தங்கள் தேவைபட்டது. ஆனால், இலங்கை தமிழர்களின் 'ஏக பிரதிநிதி' என்று பிரகடனப்படுத்திக் கொண்ட விடுதலை புலிகள் அமைப்பு, அதிபர் ரணசிங்கே பிரேமதாசாவுடன் கைகோர்த்துக் கொண்டு இந்தியாவை எதிர்த்தே உடனடி அரசியல் செய்தது

அரசியல் மட்டுமா செய்தார்கள்?

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்


# பல்லவர் கால பக்தி இயக்கம்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வரும் தமிழிலக்கிய வரலாற்றை ஆசிரியர்கள் சங்க காலம் , சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், 20ஆம் நூற்றாண்டு என ஏழாக வகுப்பர். இதில் சங்கமருவிய காலப் பிற்பகுதியிலே தமிழ் நாட்டை ஆண்டு கொண்டிருந்த களப்பிரர் ஆட்சி வலிமை குன்றியமையால் பாண்டியர்கள் மீண்டும் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தனர்.

கி.பி 6 முதல் கி.பி 9 வரையான நூற்றாண்டுகளில், கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுடைய காலப்பரப்பை பல்லவர் காலம் என்பார். சங்க காலத்தில் அக ஒழுக்க சீர்கேட்டால் அறத்தை புகட்ட சங்கமருவிய காலம் தோன்றியதைப் போல் துறவு வாழ்வில் மட்டுமல்லாது இல்லற வாழ்வில் இருந்து கொண்டு இறைவனைப் பக்தி மூலம் அடையலாம் என்பதையே பல்லவர்கால பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன.

சங்கமருவிய காலப் பகுதியின் தொடக்கத்தில் ஒன்றோடொன்று பகைமை பாராட்டாது சைவம், வைணவம், சமணம், சாக்கியமாகிய 4 வகை சமயங்களும் வளர்ந்து வந்தாலும் அக்காலப்பகுதின் இறுதியில் சமண சமயமே உயரப்பெற்றிருந்தது. எவ்வகையாயினும் சைவ, வைணவங்களை அழித்துத் தம் சமயத்தை நாடெங்கும் பரப்ப சமணர்கள் தமது பள்ளிகள் மூலமும் பரப்புரைகளில் ஈடுபட்டனர். அவர்கள் மதமாற்றம் செய்ய முயற்சி செய்ததால் மக்களுட் பலர் வைதிக சமயத்தை கைவிட்டு சமண சமயத்தைத் தழுவினார்கள். சமண சமயம் மேலோங்க சைவத்திற்கும் வைணவத்திற்கும் கட்டப்பட்ட கோயில்கள் போற்றுவாரின்மையால அழியத்தொடங்கின.

இந்நிலையில்இவ்வருசமயங்களையும்மீண்டும்தளைக்க வைக்கவேண்டியபொறுப்புஅக்காலத்தில்நிலவியது. இதற்காகச் சைவம், வைணவம் ஆகியன ஒன்றுபட்டன. இதனால் சமணத்தை எதிர்க்கும் ஆற்றலை அவை பெற்றன. சமண சமயத்தை தழுவிய மகேந்திரவர்மனை திருநாவுக்கரசரும், நின்றசீர்நெடுமாறனைத்திருஞானசம்பந்தரும்சைவர்களாக்கிய காலந்தொடக்கமாகச் சைவமும் வைணவமும் தமிழ்நாட்டிலே தழைக்கலுற்றன.




இதனால் சைவமும் வைணவமாகிய வைதிக சமயங்களும் மீண்டும் புத்துயிர் பெற்று தழைத்த காலம் பல்லவராட்சிப் பகுதியே என்று கூறலாம். அக்காலத்தில் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் எழுந்து திருமுறைகளையும், பிரபந்தங்களையும் அருளிச் செய்தனர். தம் உள்ளத்தை இறைவனுக்குக் கோயிலாக அமைத்துக் கொண்ட நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன் திருவருளை எண்ணியெண்ணி நெஞ்சுருகிப்பாடிய பாக்களின் பெருமை அளவிடற்கரியது.

பல்லவர் ஆட்சிக் காலத்திலே சைவம், வைணவம் எனும் இரண்டும் நதிகளாக ஓடித் தழைத்தோங்கின.நாயன்மார்களான அப்பரும் திருஞானசம்பந்தரும் அக்காலத்தில் அரிய தொண்டுகள் பலவற்றை செய்தனர். மக்களால் கைவிடப்பட்ட ஆலய வழிபாட்டு முறைக்குப் புத்துயிரளித்தனர். அவர்கள் அருளிய தேவாரங்கள் மக்களின் அகவிருளை அகற்றும் விளக்காயின. இப்புத்துணர்சியால் கோயில் வழிபாட்டில் மக்கள் ஊக்கங்கொள்ளவே அழியும் நிலையை அடைந்திருந்த சிவாலயங்கள் அழியா நிலை அடைந்தன.

அப்பர் சுவாமிகள் தொண்டுகள் செய்தமையை, 'வானந்துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்.....' என்று பல்லவர் காலத்தில் எழுந்த பாடலடிகள் கூறுகின்றன. தமிழில் உள்ள உணர்ச்சிப் பெருக்குடைய பாட்டுகளுள் முதலில் வைத்து எண்ணத் தகுந்தவை மாணிக்கவாசக சுவாமிகள் நெஞ்சுருகிப் பாடிய திருவாசகப் பாட்டுக்கள் அவை கல்லை ஒத்த மனதையும் கனியச் செய்யும் சக்தி வாய்ந்தவை. ஆம் மாணிக்கவாசகங்களுள் ஒன்றின் சில வரிகள்,

'சிந்தனை நின் தனக்காக்கி நாயி னேன்தன்....' என்று குறிப்பிடுவதைக் காணலாம். அத்தோடு நாயன்மார்களே பல்லவர் காலத்தில் பதிக வடிவத்தையும் இறைவன் பெருமை கூறும் திருத்தாண்டகத்தையும் அம்மானை, பாலை, சாழல், கோவை, போன்ற வடிவங்களையும் அள்ளித்தந்துள்ளனர்.

சைவத்திற்கு நாயன்மார்கள் இவ்வாறு புத்துயிரளித்தது போல ஆழ்வார்கள் வைணவத்திற்குப் புத்துயிரளித்தார்கள். இவர்கள் நனவிலும் கனவிலும் திருமால் எண்ணம் உடையவர்களாகவும்காணப்பட்டனர். மேலும்குறிப்பிடுகையில் தொண்டரடிப்பொடியாழ்வார் உலக வாழ்க்கையில் கிடந்து அல்லலுறும் மக்கள் உய்யும் பொருட்டு அவர் உபதேசம் செய்வதைக் காணலாம். அந்தவகையில் திருமாலையில் உள்ள செய்யுள் ஒன்றில் 'பச்சைமா மலை போல் மேனி பவளமாய் .......' எனும் பதிகத்தைக் காணலாம்.

பல்லவ காலத்திலேதான் இறைவனுக்கு உறவுமுறை கொடுத்துப் பாடினார்கள். அதில திருமங்கையாழ்வார் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கருதி இறைவனை காணாமல் படும் துன்பத்தை ' வாராய் மட நெஞ்சே வந்து.....' எனும் பிரபந்தம் மூலம் அறியலாம். இவ்வாறு நாயன்மாரான திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோர் இறைவனுக்கு புற உருவத்தோற்றம்கொடுத்ததுடன், சிவனடியாரின்பெருமையை மக்களுக்கு எடுத்துக்காட்டிச் சைவத்தை வளர்ப்பதற்குச் சிவபக்தியோடு அடியார் பக்தியையும் இணைத்து புதுவழி காட்டினர். இவர்களது பதிகங்களே மனதை உருக்குவதாகவும் காணப்பட்டன.

அவ்வாறே வைணவ ஆழ்வார்கள் திருமாலின் தோற்றப்பொலிவையும், திருமால் மீதான அன்பையும் தம் பிரபந்தங்களில்வெளிப்படுத்தினர். இவ்வாறாகஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து பல்லவ காலத்திலே நாயன்மார்கள், ஆழ்வார்கள் எழுந்ததாலே சமயங்கள் வளர்ச்சி கண்டன. இன்றும் அவை தழைத்தோங்க வழிவகுத்தன.

**ஜெயராஜன் மதி**









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2025இல் வெளியிடப்பெற்றது